# கடலோர சூழலியல் ஆய்வுப் பயணம்

(நீரோடி முதல் வட்டக்கோட்டை வரை)

ஜனுவரி 17,18-2009

அன்புடையீர்

வணக்கம்.

☞உலகம் மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களுக்கும் பொது என்பதை நினைவில் கொள்வோம்.

☞இயற்கையை (நீர் ,நிலம், காற்று ,விலங்குகள், தாவரங்கள்) நேசிப்போம்.

☞மரம் வளர்ப்போம் - தோட்டம் அமைப்போம் அதன் மூலம் மழை பெறுவோம். சுற்றுப்புறச்சூழல் சம நிலையைப் பேணுவோம்.

☞தண்ணீரைச் சேமிப்போம் அதன் மூலம் தண்ணீருக்கு செலவாகும் மின்சாரத்தையும் சேமிப்போம்.

☞வாகனப் பயன்பாட்டைக் குறைத்து நடந்தோ, மிதி வண்டியைப்பயன்படுத்தியோ சுற்றுப்புறச்சூழல் மாசுபடுவதைத் தவிர்ப்போம்.

☞மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களை (Reusable) உபயோகிப்போம். ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களை (Use and through) தவிர்ப்போம்.

☞பாலிதீன் பை மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்போம். சுற்றுச்சூழலை பாதுகாப்போம். துணி, காகிதப் பைகளை உபயோகிப்போம்.

☞செயற்கை உரங்கள் பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்பாட்டை தவிர்ப்போம். இயற்கை உரங்களைப் பயன்படுத்துவோம்.

☞ஓசோன் படலத்தை தாக்கும் குளோரா புளோரா கார்பன் உபயோகப்படுத்தும் குளிர்சாதனப்பெட்டிகள் போன்ற சாதனங்களை உபயோகிப்பதைத் தவிர்ப்போம்.

☞மக்கும் குப்பைகள், மக்கா குப்பைகள் எனப்பிரித்து மக்கும் குப்பையை உரமாக உபயோகிப்போம்.

☞பொது இடங்களில் சுத்தம் பேணுவோம். சிறுநீர் கழிப்பது, குப்பை போடுவது, எச்சில் துப்புவது போன்றவற்றைத் தவிர்ப்போம்.

☞மின்சாரத்தை சேமிப்போம். வெளிவரும் கார்பன் டை ஆக்ஸைடை அதன்மூலம் (மின்சார உற்பத்தி நிலையங்களில்) குறைத்து சுற்றுப்புறச் சூழல் காப்போம்.

☞ இதயக்கோளாறு, புற்றுநோய் ஏற்படுத்தும் நிகோடின், கரி படியும் புகைபிடித்தலைத் தவிர்த்து ஆரோக்கிய வாழ்க்கைக்கு வழிகாட்டுவோம்.

☞ சுவாச மண்டல நோய் உருவாக்கும் தொழிற்சாலை நச்சுவாய்வுக்களைக் கட்டுப்படுத்த முறையான நெறிமுறைகளைக் கடைப்பிடிப்போம்.

☞ கார்பன்மோனாக்சைடு, காரீயம் படிதலால் மூளை மற்றும் உடல் உறுப்புக்கள் பாதிக்கும். இதனைத் தவிர்க்க பராமரிக்கப்பட்ட வாகனங்களைப் போக்குவரத்திற்கு உபயோகப்படுத்துவோம்.

அன்புடன்
காற்று அணி
இளம் விஞ்ஞானிகள்,
குமரி அறிவியல் பேரவை

விளம்பரம் அன்பளிப்பு